**மே – 02**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநிலச் சட்டசபையானது, தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமித்தல் மற்றும் பதவி நீக்குவதில் ஆளுநர் / வேந்தரின் அதிகாரங்களை அரசாங்கத்திடம் மாற்றுவதற்கான ஒரு மசோதாவினை ஏற்றுள்ளது.
- கனடாவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக லிபரல் கட்சி வெற்றி பெற்றதையடுத்து, மார்க் கார்னி அந்த நாட்டின் பிரதமராக பதவியில் தொடர உள்ளார்.
- திரைப்படத் தயாரிப்பாளர் பயல் கபாடியாவிற்கு மதிப்புமிக்கப் பிரெஞ்சு விருதான 'ஆஃபீசியர் டான்ஸ் எல்'ஆர்ட்ரே டெஸ் ஆர்ட்ஸ் எட் டெஸ் லெட்டர்ஸ்' (Officer of the Order of Arts and Letters) வழங்கப்பட்டுள்ளது.
- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) நிறுவனரான கிளாஸ் ஷ்வாப் சுமார் 55 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் தலைவர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர் ஆகிய பதவிகளில் இருந்து விலகியுள்ளார்.
- பொள்ளாச்சி நெட்டை தென்னை என்று அழைக்கப்படும் பொள்ளாச்சி நெட்டைத் தேங்காய்க்குப் புவிசார் குறியீடு (GI) பெறுவதற்காக வேண்டி அதிகாரப்பூர்வமாக விண்ணப்பிக்கப் பட்டுள்ளது.
    - பொள்ளாச்சி நெட்டைத் தேங்காய்களுக்கான மிக முக்கிய சாகுபடிப் பகுதிகளில் ஆனைமலை, பொள்ளாச்சி வடக்கு மற்றும் பொள்ளாச்சி தெற்குத் தொகுதிகள் ஆகியன அடங்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு மின்னணுக் கூறுகள் உற்பத்தித் திட்டம் 2025




- தமிழக முதலமைச்சர் தமிழ்நாடு மின்னணுக் கூறுகள் உற்பத்தித் திட்டத்தினை (ECMS)

அறிமுகப் படுத்தியுள்ளார்.

- இம்மாநிலம் முழுவதும் அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் 30,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பது மற்றும் சுமார 60000 வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் இலக்காகும்.
- நாட்டிலேயே முதன்மையான தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டம் ஆனது, மத்திய அரசின் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உற்பத்தி அலகுகளை நிறுவும் நிறுவனங்களுக்கு பொருத்தமான மானியங்களை வழங்கும்.
- இம்மாநில அரசின் இந்தத் திட்டம் ஆனது, நெகிழ்வான மின்சுற்றுப் பலகைகள் (FPCBs), லித்தியம்-அயனி கலன்கள், HDI/MSAP பலகைகள், திரைப் பெட்டகங்கள் மற்றும் பிற கூறுகள் உட்பட சுமார் 11 அதிக உற்பத்திக்கான வளர்ச்சி காணும் பொருள்/கூறுகளை உள்ளடக்கியது.
- மத்திய அரசானது, சமீபத்தில் ECMS திட்டத்திற்கான வழி காட்டுதல்கள் மற்றும் அதன் இணைய தளத்தினை வெளியிட்டுள்ளது.

## அரசு ஆவணங்களிலிருந்து ‘காலனி’ என்ற சொல்லினை நீக்குதல்




- அரசு ஆவணங்களிலிருந்தும் பொதுப் பேச்சு வழக்கில் இருந்தும் ‘காலனி’ என்ற சொல் நீக்கப்படும் என்று முதலமைச்சர் சட்டசபையில் அறிவித்துள்ளார்.
- பொதுவாக, இது ஒடுக்குமுறையைக் குறிக்கும் விதமாகவும் கொடுந் தீண்டாமையின் பொருளினைக் கொண்டிருந்தது.
- ஒரு பகுதியில் முதலில் குடியேறியக் குடிமக்களை இழிவுபடுத்தும் வகையில் ‘காலனி’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு காவல் துறைக்கான அறிவிப்புகள் 2025

- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 06 ஆம் தேதியானது காவல்துறையினருக்கான ஒரு நாளாகக் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
- மக்களுக்கு அவர்கள் ஆற்றும் சேவைகளையும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் அவர்களின் பங்களிப்பையும் கௌரவிப்பதே இதன் நோக்கமாகும்.
- சென்னைப் பெருநகர காவல்துறையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவு, போதைப் பொருள் எதிர்ப்பு புலனாய்வுப் பிரிவு மற்றும் சமூக ஊடகப் புலனாய்வுப் பிரிவு ஆகிய மூன்று புதிய பிரிவுகள் உருவாக்கப்பட உள்ளது.

- வழக்கமான இணைய தேடுதல் தளம் சாராத 'டார்க் வெப்' எனும் தளத்தின் முக்கியச் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக என்று காவல் தலைமையகத்தில் அடுத்த 3 ஆண்டுகளில் ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்படும்.
- பெண்களின் பாதுகாப்பை நன்கு உறுதி செய்வதற்காக சென்னையைத் தவிர, மாநகர காவல் ஆணையரகங்களுக்கான கூடுதல் படையாக 80 இளஞ்சிவப்பு (பிங்க்) ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார்.
- உறுதியான தொழில் முறை முன்னேற்றத்திற்கான புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இனி புதிய பதவி உயர்வுத் திட்டத்தில், ஒரு இரண்டாம் நிலை (கிரேடு-II) காவலர் 10 ஆண்டுகளில் முதல் நிலை காவலராகவும் (கிரேடு-1), அதன் பின்னர் தற்போதுள்ள 5 ஆண்டுகளுக்குப் பதிலாக இனி 3 ஆண்டுகளில் தலைமைக் காவலர் பதவிக்கும் பதவி உயர்த்தப் படுவார்.
- 10 ஆண்டுகள் தலைமைக் காவலராகப் பணியாற்றிய பிறகு அவர் சிறப்புக் காவல் துணை ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுவார்.
- காவல்துறையினர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையிலான 'மகிழ்ச்சி' எனப்படுகின்ற காவல்நலத் திட்டமானது இனிமேல் மேற்கு மண்டலத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.




## திருவள்ளூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் பயிரிடல் சோதனை

**மக்காச்சோளம் சாகுபடி மூலம் உழவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்க வழிவகை செய்யும் வகையில், ரூ.40.25 கோடி ஒதுக்கீட்டில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும்!**

**இதன்மூலம் 79 ஆயிரம் உழவர்கள் பயனடைவார்கள்!**

- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மக்காச்சோள விவசாயிகள் இந்த ஆண்டு சோதனை அடிப்படையில் 50 ஏக்கருக்கு மேலான பரப்பில் மக்காச் சோளப் பயிரை அறுவடை செய்துள்ளனர்.

- R.K. பேட்டை, திருத்தணி, திருவலங்காடு மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய நான்கு தொகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐம்பது விவசாயிகள் இந்தப் பகுதியில் புதியப் பயிரை வளர்ப்பதற்கான பரிசோதனையில் பங்கேற்றனர்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலிருந்து விவசாயிகளுக்கு MH6 என்ற வகை விதைகள் வழங்கப்பட்டன.
- விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை, ஊத்துக்கோட்டை அருகே அமைந்துள்ள எத்தனால் தயாரிக்கும் தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்கின்றனர்.
- இந்திய அரசானது, மக்காச்சோளத்திற்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவித்து உள்ளதால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

# தேசியச் செய்திகள்

## 5வது கடல் மீன்வளக் கணக்கெடுப்பு





- 2025 ஆம் ஆண்டு கடலோர மாநிலங்களின் மீன்வளக் கூட்டமானது மிகச் சமீபத்தில் மும்பையில் நடைபெற்றது.
- 5வது கடல் மீன்வளக் கணக்கெடுப்பு (MFC) ஆனது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதி அன்று தொடங்கியது.
- இது ஒவ்வொரு கடல்சார் மீனவர் குடும்பம், மீனவக் கிராமம், மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள், அத்துடன் நாடு முழுவதும் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்கள் கொண்டு வந்து விற்கப்படும் மையங்களுடன் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளையும் ஆவணப்படுத்தும்.
- மிகவும் முதல் முறையாக, இந்தக் கணக்கெடுப்பு ஆனது புவிசார் குறிப்பிடல், செயலி அடிப்படையிலான எண்ணிம அமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட உள்ளதால், இது நிகழ்நேரச் சரிபார்ப்பு அம்சத்தைக் கொண்டிருக்கும்.
- ICAR-CMFRI ஆனது, எண்ணிம அடிப்படையிலான தரவுச் சேகரிப்புக்காக என்று 'VyAS-NAV' என்ற கைபேசிச் செயலியை உருவாக்கியுள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்தியக் கடல் சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-CMFRI) ஆனது இந்தக் கணக்கெடுப்பைச் செயல்படுத்துவதற்கான ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- கடைசியாக இது போன்ற கணக்கெடுப்பு ஆனது 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது என்பதோடு அதன்படி இந்தியாவின் 13 கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 3,477 மீனவக் கிராமங்கள் இருந்தன.

- இந்தக் கூட்டத்தின் போது மத்திய அரசாந்து "முதல் மீன் வளர்ப்புக் காப்பீட்டுத் திட்டம்" என்ற திட்டத்தினை அறிமுகம் செய்தது.
- இது பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்ட ஒரு துணைத் திட்டமான பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சஹ்-யோஜனா (PM-MKSSY) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## அதிக இராணுவச் செலவினம் கொண்ட நாடுகள் 2024-25





- உலகளாவிய இராணுவச் செலவினமானது 2024 ஆம் ஆண்டில் சுமார் 2718 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இதில் 9.4 சதவீதம் என்ற கணிசமான உயர்வுப் பதிவாகியுள்ளது.
- இராணுவச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 2.5 சதவீதமாக உயர்ந்தது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய இராணுவச் செலவினத்தில் சுமார் 37 சதவீதத்தைக் கொண்டு, உலகிலேயே அதிக இராணுவச் செலவினம் கொண்ட நாடாக அமெரிக்கா திகழ்கிறது.
- உலகளாவிய இராணுவச் செலவினத்தில் சீனா 12 சதவீதத்தைக் கொண்டிருந்தது.
- இரண்டும் ஒரு சேர உலகளாவிய இராணுவச் செலவினத்தில் பாதிக்கும் மேலான பங்கினை கொண்டிருந்தன.
- உலகளாவிய இராணுவச் செலவினத்தில் 5.5% பங்குடன் ரஷ்யா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியா உலகின் ஐந்தாவது பெரிய இராணுவச் செலவினம் கொண்ட நாடாக இருந்தது.

- இது சுமார் 86.1 பில்லியன் டாலர்களைச் செலவிடுவதோடு, 2023 ஆம் ஆண்டு முதல் அதன் இராணுவச் செலவினம் ஆண்டிற்கு 1.6 சதவீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதி நாடாகக் கருதப்படும் இந்தியா, உலகளாவிய ராணுவச் செலவினத்தில் சுமார் 3.2 சதவீதப் பங்கைக் கொண்டுள்ளதுடன் அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று முன்னணி நாடுகளை விட பின்தங்கி உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரியனில் அதிக ஹீலியம்




- நமது சூரியனில் ஹீலியம் வாயுவானது மிகுதியாக இருப்பதை ஒரு புதிய ஆய்வு முதன் முறையாக துல்லியமாக மதிப்பிட்டுள்ளது.
- ஹைட்ரஜனுக்கு அடுத்தபடியாக சூரியனில் மிகுதியாக உள்ள இரண்டாவது தனிமம் ஹீலியம் ஆகும்.
- ஆனால் சூரியனின் ஒளிக் கோளத்தில் இந்த ஹீலியம் எவ்வளவு மிகுதியாக உள்ளது என்பதைத் துல்லியமாக அளவிடுவது நீண்ட காலச் சவாலாக இருந்து வந்தது.
- ஹீலியம் வாயுவானது சூரியனின் புலப்படும் மேற்பரப்பில் (ஒளிக் கோளம்) இருந்து புலனாகும் நிறமாலை கோடுகளை உருவாக்கவில்லை.
- இப்புதிய முறைமையானது நடுநிலை மின்னூட்டம் கொண்ட மெக்னீசியம் (Mg) அணு கோடுகள் மற்றும் மெக்னீசியம் ஹைட்ரைடு (MgH) மூலக்கூறுக் கோடுகளிலிருந்து உயர் தெளிவுத் திறன் கொண்ட சூரிய நிறமாலைத் தரவைப் பகுப்பாய்வு செய்தது.

## நிலவில் அணுமின் நிலையம்

- இந்தியா மற்றும் சீனா ஆகியவை இணைந்து நிலவில் ஒரு அணு மின் நிலையத்தினை நிறுவுவதில் ரஷ்யாவுடன் கூட்டுறவினை மேற்கொள்ள உள்ளன.

- இந்த முன்னெடுப்பானது, 2040 ஆம் ஆண்டிற்குள் மனிதர்களை நிலவிற்கு அனுப்பும் விண்வெளிப் பயணத்திற்கான இந்தியாவின் ஒரு முதன்மைத் திட்டத்துடனும், நிலவில் ஆய்வுத் தளத்தை நிறுவும் திட்டத்துடனும் கூட்டுறவினை மேற்கொள்ள உள்ளது.
- சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையம் (ILRS) என்று அழைக்கப் படும் "555 திட்டத்தை" உருவாக்க சீனா திட்டமிட்டுள்ளது.
- இதற்காக சீனாவானது 50 நாடுகள், 500 சர்வதேச அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சுமார் 5,000 வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களைச் சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையத்தில் இணைவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.




## SpaDeX திட்டம் - இரண்டாவது விண்கலமிணைப்பு





- இஸ்ரோ நிறுவனமானது, தனது விண்கலமிணைப்புப் பரிசோதனை (SpaDeX) ஆய்வு செயற்கைக் கோள்கள் இரண்டாவது விண்கலமிணைப்புப் பரிசோதனையினை மிக வெற்றிகரமாக நிறைவு செய்ததன் மூலம் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.

- SpaDeX ஆனது, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதியன்று ஒன்றாக விண்ணில் ஏவப்பட்ட SDX01 (சேசர்) மற்றும் SDX02 (டார்கெட்) ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களை உள்ளடக்கியதாகும்.
- இந்தச் செயற்கைக்கோள்கள் ஆனது, ஜனவரி 16 ஆம் தேதியன்று முதல் முறையாக வெற்றிகரமாக இணைக்கப்பட்டு மார்ச் 13 ஆம் தேதியன்று பிரிக்கப்பட்டது.
- இச்சாதனையானது, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய 3 நாடுகளுக்கு அடுத்தபடியாக இத்தகைய ஒரு தொழில்நுட்பச் சாதனையை நிகழ்த்திய நான்காவது நாடாக இந்தியாவை மாற்றியுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஐரோப்பாவின் பருவநிலை குறித்த அறிக்கை 2024




- 2024 ஆம் ஆண்டு முழுவதும், ஐரோப்பியப் பிராந்தியத்திற்கான கடல் மேற்பரப்பு வெப்பநிலை (SST) ஆனது சராசரியை விட 0.7°C அதிகமாகவும், மத்தியத் தரைக் கடல் பிராந்தியத்திற்கான வெப்பநிலையானது சராசரியை விட சுமார் 1.2°C அதிகமாகவும் பதிவாகியுள்ளது.
- மழைப்பொழிவைப் பொறுத்த வரையில், 1950 ஆம் ஆண்டிலிருந்து அதிக மழைப் பொழிவுப் பதிவான 10 மழைக் காலங்களில் ஒன்று மேற்கு ஐரோப்பாவில் பதிவானது.
- மிக ஒட்டு மொத்தமாக, நிலப்பரப்பில் சராசரியை விட அதிகமாக சுமார் 34 சதவீதம் வருடாந்திர மழைப் பொழிவு பதிவானதுடன், ஐரோப்பா சராசரியை விட அதிகமான மழைப் பொழிவை எதிர் கொண்டது.
- 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவும் பரவலான வெள்ளப்பெருக்கு ஆனது 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தென்கிழக்கு ஐரோப்பாவில் மிக நீண்ட கால வெப்ப அலைப் பாதிப்பு பதிவானது.
- கோடை காலத்தில், தென்கிழக்கு ஐரோப்பாவில் 23 வெப்ப மண்டலப் பகுதி காலநிலை கொண்ட இரவுகள் பதிவாகியுள்ளன என்பதோடு இது 2012 ஆம் ஆண்டில் பதிவான 16 இரவுகளை விட மிக அதிகமாகும்.
- குறைந்த பட்ச தினசரி வெப்பநிலையானது 20°C வெப்பநிலைக்கும் கீழே குறையாத

போது வெப்ப மண்டலப்பகுதி காலநிலை கொண்ட இரவுகள் ஏற்படுகின்றன.

❖ செப்டம்பர் மாதத்தில், போர்ச்சுகல் நாட்டில் ஒரு வாரத்தில் சுமார் 110,000 ஹெக்டேர் பரப்பளவில் தீ விபத்து ஏற்பட்டு, 42,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பத்ம விருதுகள் 2025 - 71 நபர்கள்

❖ நாட்டின் குடிமை விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட 139 மதிப்புமிக்க நபர்களில் 71 பேருக்கு குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள், பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ விருதுகளை வழங்கினார்.

❖ 57 முக்கிய பிரமுகர்களுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

❖ 'பென்டியத்தின் தந்தை' என்று மிகவும் பரவலாக அறியப்படுகின்ற இந்திய-அமெரிக்க பொறியியலாளர் வினோத் தாம், தமிழ் நடிகர் S. அஜித் குமார் ஆகியோர் பத்ம பூஷண் விருது பெற்ற 10 மதிப்பு மிக்க நபர்களில் உள்ளடங்குவர்.

❖ இந்த ஆண்டு, கோவாவின் சுதந்திர இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்த 100 வயதான லிபியா லோபோ சர்தேசாய் உட்பட 30 புகழ்பெற்ற தியாகிகளுக்குப் பத்ம விருதுகள் வழங்கப் பட்டன.



# விளையாட்டுச் செய்திகள்


## 2வது ஆசிய யோகாசன சாம்பியன்ஷிப் விளையாட்டு போட்டிகள்

❖ 2வது ஆசிய யோகாசன சாம்பியன்ஷிப் போட்டிகள் புது டெல்லியில் நடைபெற்றன.

❖ இந்தப் போட்டியில் 21 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 170க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

❖ இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 83 தங்கப் பதக்கங்களை வென்று வரலாறு படைத்துள்ளது.

- ஜப்பான் 3 தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.


2ND ASIAN YOGASANA SPORT CHAMPIONSHIP
25-27 APRIL 2025, INDIRA GANDHI STADIUM
NEW DELHI, INDIA

| RANK | COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | INDIA | 83 | 3 | 1 | 87 |
| 2 | JAPAN | 3 | 3 | 4 | 10 |
| 3 | MONGOLIA | 1 | 11 | 6 | 18 |
| 4 | OMAN | 1 | 3 | 7 | 11 |
| 5 | NEPAL | 0 | 27 | 12 | 39 |
| 6 | UZBEKISTAN | 0 | 11 | 15 | 26 |
| 7 | SRI LANKA | 0 | 7 | 11 | 18 |

# இதரச் செய்திகள்

## பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு செலவினங்கள்

**TOP CSR SPENDERS**

| Rank | Company | CSR expenditure | Market cap |
|---|---|---|---|
| 1 | HDFC Bank | ₹945.31 cr | ₹10.99 lakh cr |
| 2 | Reliance Industries | ₹900 cr | ₹20.10 lakh cr |
| 3 | TCS | ₹827 cr | ₹14.02 lakh cr |
| 4 | ONGC | ₹634.57 cr | ₹3.37 lakh cr |
| 5 | TATA Steel | ₹580.02 cr | ₹1.94 lakh cr |
| 6 | ICICI Bank | ₹518.87 cr | ₹7.67 lakh cr |
| 7 | IOC | ₹457.71 cr | ₹2.36 lakh cr |
| 8 | INFOSYS Ltd. | ₹455.67 cr | ₹6.21 lakh cr |
| 9 | ITC | ₹404.05 cr | ₹5.34 lakh cr |
| 10 | Power Grid Corp | ₹330.48 cr | ₹2.57 lakh cr |


- பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், பெருநிறுவன சமூகப் பொறுப்பு சார்ந்தப் பல்வேறு நடவடிக்கைகளுக்காக (CSR) செலவிட்ட நிதியானது, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடைந்த நிதியாண்டில் 16 சதவீதம் அதிகரித்து 17,967 கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் 15,524 கோடி ரூபாயாக இருந்தது.
- சுமார் 945.31 கோடி ரூபாய்கள் மதிப்பிலான CSR செலவினத்துடன் HDFC வங்கியானது முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது 900 கோடி ரூபாயும், TCS 827 கோடி ரூபாயும், ONGC 634.57 கோடி ரூபாயும் செலவிட்டுள்ளன.
- 2104 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமலுக்கு வந்த CSR சட்டம் ஆனது, அந்த சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்ட, நிறுவனங்கள் தங்கள் நிகர இலாபத்தில் இரண்டு சதவீதத்தை

CSR திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

- 500 கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேலான நிகர மதிப்பு அல்லது 1,000 கோடி மற்றும் அதற்கு மேலான வருவாய் அல்லது 5 கோடி மற்றும் அதற்கு மேல் நிகர இலாபம் கொண்ட நிறுவனங்கள் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரியான நிகர இலாபத்தில் இரண்டு சதவீதத்தை CSR திட்டங்களில் செலவிட வேண்டும்.

## மெஹர்கர் வேளாண் சார் குடியிருப்புகள்

- மிக சமீபத்தில், துகள் முடுக்கி மூலமான திரள் நிறமாலையியல் (AMS) நுட்பத்தினைப் பயன்படுத்தி கதிரியக்க கார்பன் கால கணிப்பு முறையானது மெஹர்கரில் உள்ள ஒரு வேளாண் சார் குடியேற்றத்தின் காலக் கட்டத்தினை முன்னர் நம்பப்பட்ட கி.மு. 8000 ஆண்டிலிருந்து குறைத்து சுமார் கி.மு. 5200 ஆண்டுக்கு முந்தையது என குறிப்பிட்டு உள்ளது.
- ஒரு புதிய கற்காலத் தளமான மெஹர்கர் என்பது, பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் உள்ள போலன் கணவாயின் நுழைவு பகுதியில் அமைந்துள்ளது.
- இது சிந்து நதியின் மேற்கே, குவெட்டா, கலாட் மற்றும் சிபி ஆகியவை இடையே போலன் கணவாய் அருகே அமைந்துள்ளது.
- இந்த இடம் ஆனது, கோதுமை, பார்லி மற்றும் கால்நடைகள் வளர்க்கப்பட்டதற்கான சான்றுகளுடன் ஆரம்பகால வேளாண் கிராமம் இருந்ததை வெளிப்படுத்துகிறது.
- பண்டைய உலகில் பருத்தி பயன்படுத்தப்பட்டப் பழமையான / ஆரம்பகால இடம் இது ஆகும்.
- இந்த இடமானது, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களான ஜீன்-பிரான்சுவா ஜாரிஜ் மற்றும் கேத்தரின் ஜாரிஜ் தலைமையிலான ஒரு குழுவினரால் 1974 ஆம் ஆண்டில் கண்டறியப் பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★